முருகப்பெருமான் துணை

**மகான் சூதமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.06.2023, சனிக்கிழமை

1. பூலோக சொர்க்கமாக பிரணவக்குடிலை
புண்ணிய பலம் அடைய மக்களுக்கு
கோலமதாய் படைத்து அருளும்
குருராஜனே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது மிதுன திங்கள்
இருநான்கோர் திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 09 ம் நாள், 24.06.2023, சனிக்கிழமை)
இயம்பிடுவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை சூதமுனிவர் யானும்
அறத்தின் சபை உலகம் அறியவே
வாசி வென்ற ஞானிகள் படை
வலம்வந்து பிரணவக்குடிலில் இருக்க
4. இருக்கவே ஞானவழித் தேடி
இங்கும் அங்குமென அலையும் மக்களே
கருத்துடன் கந்தப் பெருமானாக
கலியுகத்தில் அருளவந்த ஞானி
5. ஞானிவாழ் ஞான சபையாம்
ஞானக்குடிலை அனுகி வந்து
ஞானியர்பால் தீட்சை ஏற்று
நம்பகமுற சன்மார்க்க வழியை
6. வழியை கடைப்பிடித்து நன்கு
வள்ளல் தன்மையை தரும்
அழிவிலா அன்னதான சேவையை
அடைந்து உலகினில் செய்துவர

7. வருகவே ஞானத்தின் சூட்சுமம்
வரமாக அரங்கன் தயவாக
முருகப்பெருமான் காட்சி கிட்டும்படி
முழுமைபட விளங்கி சித்தியாகும்
8. ஆகவே ஆறுமுகனார் காட்சி
அரங்கன் சபையில் கிட்ட
மிகைபட அடுத்தடுத்த படிநிலை
முன்னேறி பிறவாத பெருநிலை
9. பெருநிலைதனை மகா சக்திகளும்
பிரணவக்குடிலிலேயே அருள
வருங்காலம் மறுமை எனும்
வதைகள் அனைத்தையும் கடந்து
10. கடந்துமே ஞானியர்கள் போல்
கட்டுண்டு பொறிபுலன் அடங்கி
இடரான மாயை வழிச்செல்லா
ஏகாந்தமான ஓங்காரமயமாகி
11. ஆகியே அரங்கன் கண்ட உண்மை
அனைவரும் ஈதூழே அடைந்து
மகிழுவர் திளைப்பர் மெய்ஞான வழி
மண்ணுலகையே ஞானலோகமாக்குவர்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–